பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
07 02 2026 12 40
சனிக்கிழமை நண்பகல்
<u>ஆகாஷவாணி செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியா – அமெரிக்கா இடையிலான இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் மகிழ்ச்சி அளிப்பதாகவும், அதிபர் டோனல்ட் டிரம்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

- இந்திய - அமெரிக்க இடையேயான இடைக்கால வர்த்தக ஒப்பந்தம், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

- உத்தரப்பிரதேச மாநிலத்தில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் அடுத்த மாதம் 6 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

- இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தி 7 புள்ளி நான்கு சதவீதமாக இருக்கும் என்று ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.
- 19 வயதிற்குட்பட்டோருக்கான உலக கிரிக்கெட் கோப்பையை வென்றுள்ள இந்திய அணிக்கு ரொக்கப் பரிசு வழங்கப்படும் என்று பி சி சி ஐ அறிவித்துள்ளது.

---இனி விரிவான செய்திகள்---

இந்தியா – அமெரிக்கா இடையிலான இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த ஒப்பந்தம் நிறைவேறுவதற்கு தனிப்பட்ட முறையில் முயற்சி எடுத்த அமெரிக்க அதிபர் திரு டோனல்ட் டிரம்புக்கு தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாக சமூக வலைதளப் பதிவில் அவர் கூறியுள்ளார்.

இந்தியா – அமெரிக்கா இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவதற்கு இந்த ஒப்பந்தம் உதவிடும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

உற்பத்திக்கான இந்தியா திட்டத்தை ஊக்கப்படுத்தும் விதத்திலும், தொழில் முனைவோர், சிறு-குறு நடுத்தர நிறுவனங்கள், மீனவர்கள் உள்ளிட்ட பலருக்கும் இது பயனளிக்கும் என்றும் திரு மோடி தெரிவித்துள்ளார்.

பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்பை இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தி தரும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

புத்தாக்க முயற்சிகள், புதிய தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் அதிக முதலீடுகளை இந்த ஒப்பந்தம் ஈர்க்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் உலக பொருளாதாரம் மேலும் வளர்ச்சியடையும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

>>><><><><<<

இந்தியா - அமெரிக்கா இடையேயான இடைக்கால வர்த்தக ஒப்பந்தம், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த ஒப்பந்தமானது, ஏற்றுமதி வாய்ப்புகளை அதிகரிக்கும், பணியாளர்கள் அதிகமாக உள்ள தொழில்கள் வளர்ச்சி அடைய உதவுவதோடு அதிக முதலீடுகளையும் ஈர்க்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வேலைவாய்ப்புகளை அதிகரிக்க இந்த ஒப்பந்தம் உதவும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் விவசாயிகளின் நலன் பாதுகாக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அயராத முயற்சியின் காரணமாக, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஒப்பந்தம் இறுதிவடிவம் பெற்றுள்ளதாக திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் குறித்து வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், வர்த்தகத் துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல், இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் திரு Sergio Gor உள்ளிட்ட பலர் வரவேற்றுள்ளனர்.

>>><><><><<<

இந்தியா – அமெரிக்கா இடையேயான இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் முன்னேற்றம் அடைந்துள்ளதாக பிஜேபி தேசிய தலைவர் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள வலைதளப் பதிவில், இந்திய இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை இது பெற்றுத் தரும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம், சிறு குறு தொழில் நிறுவனங்கள், புத்தாக்க தொழில்முனைவோர், ஏற்றுமதியாளர்கள், நீலப்பொருளாதாரம் பயன்பெறும் என்று அவர் கூறியுள்ளார்.

உலக பொருளாதார வளர்ச்சியில் இந்தியா முக்கியப் பங்கு வகிக்கும் என்று திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

>>><><><><<<

இந்தியா – மலேசியா இடையே பாதுகாப்பு, பொருளாதாரம் குறித்த முக்கிய ஒத்துழைப்புகள் பற்றி மலேசிய பிரதமர் திரு அன்வர் இப்ராஹிமிடம் பேசவிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் பயணமாக மலேசியாவுக்கு புறப்பட்டு செல்வதற்கு முன், அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இருதரப்புக்கும் முக்கியத்துவம் அளிக்கும் திட்டங்கள் குறித்து தாம் விவாதிக்க இருப்பதாகவும் கூறியுள்ளார்.

இன்று மாலை கோலாலம்பூரில் நடைபெறும் Selamat Datang Modiji என்ற வரவேற்பு நிகழ்ச்சியில் தாம் பங்கேற்கவுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் இந்திய வம்சா வளியைச் சேர்ந்த 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்திய – மலேசியா இடையேயான உறவுகளை வலுப்படுத்துவதில் இந்திய வம்சா வளியினர் முக்கிய பங்கு வகிப்பதாக திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, மலேசிய பிரதமர் திரு அன்வர் இப்ராஹிம் இந்த நிகழ்ச்சியில் உரையாற்றுகின்றனர்.

>>><><><><<<

இந்தியா – அமெரிக்கா இடையிலான இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது இருநாடுகளுக்கும் பயனளிக்கும் என்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தம் குறித்து அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், இந்திய – அமெரிக்க இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம், கடந்த ஆண்டு பிப்ரவரி 13 ஆம் தேதி பிரதமர் திரு நரேந்திர மோடி, அமெரிக்க அதிபர் டோனல்ட் டிரம்ப் இடையே தொடங்கப்பட்டு பல விவாதங்களுக்கு பிறகு இறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருநாடுகளும் வரலாற்றுச் சிறப்புமிக்க உறவை வைத்திருப்பதாகவும், இதன் மூலம் சமமான வர்த்தக நலன்கள் பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருநாடுகளும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்க தொழில்துறை பொருட்கள், உணவு, வேளாண் பொருட்களுக்கு வரி குறைக்கப்படும் அல்லது முழுமையாக நீக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, சிறுதானியங்கள், விலங்குகளுக்கான உணவுகள், பருப்பு வகைகள், பதப்படுத்தப்பட்ட பழங்கள், மதுபான பொருட்கள் இந்த வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் வரும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்தியாவை பொறுத்தவரை ஜவுளி மற்றும் ஆடை ஏற்றுமதி பொருட்கள், தோல் மற்றும் காலணிகள், பிளாஸ்டிக் ரப்பர் பொருட்கள், வீட்டு அலங்காரப் பொருட்கள், கைவினைக் கலைஞர்களின் கலை பொருட்கள் ஆகியவற்றின் மீது 18 சதவீத வரி இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு விமான உதிரி பாகங்கள் மீதான வரியை அமெரிக்கா முழுவதுமாக நீக்கியுள்ளது என்றும் அந்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>><><><><<<

ஆந்திரப்பிரதேச தலைநகர் அமராவதியில் குவாண்டம் கம்ப்யூட்டர் ஆய்வுகளுக்கான மையத்திற்கு, மத்திய அறிவியல் மற்றும் தொழில் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், அம்மாநில முதலமைச்சர் திரு சந்திர பாபு நாயுடு ஆகியோர் இன்று அடிக்கல் நாட்டுகின்றனர்.

இந்த மையத்தில் இந்தியாவிலேயே முதன்முறையாக 133 Qubit குவாண்டம் கம்ப்யூட்டர் அமைப்பதற்கான பணிகள் நடைபெறும் என்று ஆந்திர அரசு தெரிவித்துள்ளது.

இதற்காக ஐ பி எம், டி சி எஸ் மற்றும் எல் அண்ட் டி நிறுவனங்கள் இந்த திட்டத்தில் ஒப்பந்தம் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு, இணைய பாதுகாப்பு, மருத்துவ சேவைகள், பாதுகாப்பு மற்றும் நிதித் துறைகளில் முக்கிய பங்களிக்கும் விதத்திலான ஆய்வுகள் இந்த மையத்தில் நடைபெறும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த மையத்தின் பணிகள் வரும் ஆகஸ்ட் மாதத்திற்குள் நிறைவடையும் என்றும், குவாண்டம் கம்ப்யூட்டர் பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் தொடங்கப்படும் என்றும் ஆந்திர மாநில அரசு தெரிவித்துள்ளது.

>>><><><><<<

இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தி 7 புள்ளி நான்கு சதவீதமாக இருக்கும் என்று ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

உலகளவில் நிச்சயமற்ற பொருளாதார சூழலில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி சீராக உள்ளது என்று கூறியுள்ளது.

கடந்த டிசம்பரில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி ஏழு புள்ளி மூன்று சதவீதமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆசிய பொருளாதாரத்தில் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா திகழ்வதாக தெரிவித்துள்ளது.

2026 – 27 ஆம் ஆண்டுக்கான உள்நாட்டு உற்பத்தி முதல் காலாண்டில் ஆறு புள்ளி ஒன்பது சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

முதலீடு மற்றும் நுகர்பொருள் அதிகரித்ததன் காரணமாக அடுத்த நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி மேலும் வளர்ச்சி அடையும் என்றும் ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

>>><><><><<<

உத்தரப்பிரதேச மாநிலத்தில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் அடுத்த மாதம் 6 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வாக்காளர்கள் 6, 7, 8 படிவங்களை இந்த காலக் கட்டத்திற்குள் பூர்த்தி செய்து தரலாம் என்றும் கூறியுள்ளது.

முன்னதாக, இந்த பணிகள் பிப்ரவரி 6 ஆம் தேதி நிறைவு பெறுவதாக இருந்தது.

இந்நிலையில் அம்மாநிலத்தில் உள்ள அரசியல் கட்சிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக உத்தரப்பிரதேச மாநில தேர்தல் அதிகாரி திரு நவ்தீப் ரின்வா தெரிவித்துள்ளார்.

மார்ச் 27 ஆம் தேதிக்குள் அனைத்துவிதமான சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நடைபெறும் என்றும், ஏப்ரல் 10 ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

>>><><><><<<

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாதில் மசூதி ஒன்றில் நேற்று நடைபெற்ற தற்கொலைப்படை தாக்குதலுக்கு ஐ எஸ் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இந்த தாக்குதலில் 31 பேர் உயிரிழந்தனர். 170-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்த தாக்குதலை ஐ எஸ் அமைப்பு நடத்தியுள்ளதாக அதன் இணையதள பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ எஸ் அமைப்பின் Saifullah Ansari முகமூடி அணிந்து கையில் துப்பாக்கியுடன் நிற்கும் படத்தை வெளியிட்டுள்ளது.

ஐ எஸ் அமைப்பின் கொள்கைகளுக்கு எதிராக நடைபெறும் சம்பவங்களைத் தொடர்ந்து, இந்த தாக்குதல் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமாபாத்தில் 2008 ஆம் ஆண்டு மேரியட் ஹோட்டல் வெடிகுண்டு தாக்குதலுக்கு பிறகு நடத்தப்பட்ட மிகப்பெரிய தாக்குதல் இது என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

>>><><><><<<

விளையாட்டுச் செய்திகள்

*19 வயதிற்குட்பட்டோருக்கான உலக கிரிக்கெட் கோப்பையை வென்றுள்ள இந்திய அணிக்கு 7 கோடியே 50 லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும் என்று பி சி சி ஐ அறிவித்துள்ளது.*

--------------

*கொழும்பில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டியின் முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணிக்கு 148 ரன் வெற்றி இலக்கை நெதர்லாந்து அணி நிர்ணயித்துள்ளது.*

*முன்னதாக டாஸ் வென்ற பாகிஸ்தான் பந்து வீச தீர்மானித்தது.*

*அதன்படி முதலில் ஆடிய நெதர்லாந்து அணி 19.5 ஓவரில் 147 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*இதனிடையே, கொல்கத்தாவில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள மற்றொரு போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் – ஸ்காட்லாந்து அணியை எதிர்கொள்கிறது.*

*இரவு 7 மணிக்கு மும்பை, வாங்டே மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியா – அமெரிக்காவை எதிர்த்து விளையாடுகிறது.*

*>>> End of News <<<*